DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

C.C. No. 91 /2021 PW . 4

பெயர் : சோமன் **தந்தை/கணவர் பெயர்:**

ஊர் : **தாலுகா:**

வயது : **தொழில்:**

ஜாதி : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2025

(2, 3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

16.04.2025 முதல் விசாரணை:

1. நான் தற்போது இடையப்பட்டியில் வசிக்கிறேன். விவசாயம் வேலைக்கு செல்கிறேன். 5ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒரு வருடத்திற்கு மேலாக இருக்கும். ஒரு நாள் சண்டை நடந்த விபரங்கள் பற்றி போலீசார் விசாரிப்பதற்காக எங்கள் ஊருக்கு வந்திருந்தார்கள். சண்டையை பற்றி தெரியுமா என்று கேட்டதற்கு நான் தெரியாது என்று சொன்னேன். பின்னிட்டு போலீசார் ஊருக்கு வந்து விசாரணை செய்தற்காக கையொப்பம் வேண்டும் என்று சொல்லி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். வேறு என்ன செய்தார்கள் என்றால் ஒன்றும் செய்யவில்லை. அப்போது காலை 10.30 மணி இருக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது.

மறு விசாரணை இல்லை.